15 DEC

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – பணியிலிருந்த போது மரணமடைந்த திரு எஸ்.கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு கோ. காளியப்பன், தட்டச்சர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப-7)துறை

அரசாணை (3டி) எண். 9 052499 நாள் 08.12.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
கார்த்திகை – 22ம் நாள்
படிக்கப்பட்டது:

(1) கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் இயக்குநரின் கடித ந.க.எண்.20203/ ஆர்2/2009, நாள் 06.09.2010 மற்றும் 12.08.2015.
(2) அரசு கடித எண்.6101/காப7/2015–1, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப.7)துறை, நாள் 22.07.2016 (ம) 19.04.2017.
(3) செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.4501/சிடி–அ2/ 2016, நாள் 30.08.2017.

-----

ஆணை

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், கால்நடை பராமரிப்புத்துறையில், திருவண்ணாமலை மண்டலம், கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி, துணை இயக்குநர் அலுவலகத்தில், கால்நடை பராமரிப்பு உதவியாளராகப் பணிபுரியும் போது 06.01.1994 அன்று காலமான திரு. எஸ். கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. கோ. காளியப்பன், கருணைஅடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்தபோது குறைந்த பட்ச கல்வித் தகுதி பெற்றிருந்தார் என்றும் அச்சமயம் அரசாணை நிலை எண். 212, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29.11.2001–ன் வழி கருணை அடிப்படையிலான பணி நியமனம் மற்றும் புதிய நியமனங்களுக்கும் `தடை' இருந்த காரணத்தினால் கால்நடை பராமரிப்புத் துறையில், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவியில் எவரையும் நியமனம் செய்ய இயலவில்ல என்றும், மேலும், பணி நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் கருணை அடிப்படையில் விண்ணப்பித்த தனியர் தட்டச்சு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) தேர்ச்சி பெற்றிருந்தார் என்றும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவி `சி' பிரிவில் வருவதாலும் கருணை அடிப்படையில் பணி நியமனங்களை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டதாலும் தொழில்நுட்ப பணிகள் அனைத்தும் கணினி மூலம் தட்டச்சு செய்து அரசுக்கும் ஏனைய துறைகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தன என்றும் தமிழக அரசின் திட்டங்கள் குறித்த கோப்புகள் அனைத்தும் தட்டச்சு செய்து அனுப்பப்பட்டு வருவதாலும் கால்நடை பராமரிப்பு துறையில் தட்டச்சு பதவிகள் அதிக எண்ணிக்கையில் காலியாக இருந்த நிலையை கருத்தில் கொண்டும் தனியர் தட்டச்சு தொழிற்கல்வி பெற்றிருந்ததால், அரசால் பணி நியமனங்களுக்கான தடை ஆணை நீக்கப்பட்டவுடன் அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படாத வகையில் உயர்பதவிகள் வழங்கப்படாத நிலையில் ஒத்த பணியில் தனியர் பெற்றிருந்த கல்வித் தகுதியின் அடிப்படையில் தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டார் என்று தெரிவித்து, இச்செயலினை அங்கீகரித்து

Scanned with CamScanner

திரு . கோ. காளியப்பன் என்பவரின் பணியினை தட்டச்சர் பதவியில் 18.01.2007 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்ததில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. கோ. காளியப்பன் என்பவரின் பணியினை தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்வதற்கு தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது.

3) மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தில், மறைந்த அரசு ஊழியர் (திரு) எஸ். கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. கோ. காளியப்பன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கால்நடை பராமரிப்புத் துறையில் பணியமர்த்தப்பட்ட நாளான 18.01.2007 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் அவரது பணிவரன்முறைப்படுத்தப்பட ஏதுவாக அவர் பொருட்டு அரசாணை (நிலை) எண். 560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977 பத்தி 6–க்கு தளர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவித்து தேர்வாணையம் தனது இசைவினை அளித்துள்ளது.

4) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அளித்துள்ள இசைவின் அடிப்படையில், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, திரு. கோ. காளியப்பன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கால்நடை பராமரிப்புத் துறையில் பணியமர்த்தப்பட்ட நாளான 18.01.2007 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறப்படுத்த ஏதுவாக அவர் பொருட்டு அரசாணை (நிலை) எண். 560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 03.08.1977 பத்தி 6–க்கு தளர்வு செய்து அரசு ஆணையிடுகிறது.

5) திரு. கோ. காளியப்பன் என்பவரின் பணியினை தட்டச்சர் பதவியில் 18.01.2007 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

7) இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின்01.12.2017ஆம் நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.23395/க்யூ.1/2017–1–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–6.
திரு.கோ. காளியப்பன், தட்டச்சர்
(இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை–18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்:

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner